DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Continuation of Cross Examination of Witness

19.12.2022

**அ.சா. 1- சுசீலா**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1) அசல் வழக்கு எண்.625/2004 என்ற வழக்கை மாரியம்மாள் மற்றும் குருசாமி ஆகியோர் பவானி நீதிமன்றத்தில், சின்னப்பகவுண்டர், பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளனர். மேற்படி சின்னப்பகவுண்டர் தான் என்னைப் பெற்ற தந்தை என்றால், சரிதான். பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் மேற்படி சின்னப்பகவுண்டருக்குப் பிறந்தவர்கள் என்றால், சரிதான். அவர்கள் இருவரும் எனக்குப் பின்னால் பிறந்தவர்கள். மேற்படி வழக்கு மாரியம்மாள் மற்றும் குருசாமிக்கு சாதகமாக விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்பான விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து சின்னப்பகவுண்டர், பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் ஆகியோர் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால், அவர்கள் செய்யவில்லை, நான்தான் செய்துள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டின் அப்பீல் எண் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சின்னப்பகவுண்டர், பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் ஆகியோர் தாக்கல் செய்திருக்கும் மேல்முறையீட்டில் நான், என்னையும் ஒரு தரப்பினராக சேர்க்கச் சொல்லி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால், அது குழப்பமாக உள்ளது, எனக்கு

ஞாபகம் வரவில்லை. அசல் வழக்கு எண்.625/2004 என்ற வழக்கின் தீர்ப்பை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தீர்ப்பில் சித்தகவுண்டரின் மகன் குருசாமி, மாரியம்மாளின் கணவர் என்றும், மேற்படி அவர்கள் இருவருக்கும் பிறந்தவர்தான் இவ்வழக்கின் 1 வது எதிரி குருசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது தவறாகும், சின்னத்தம்பியின் மகன்தான் குருசாமி ஆவார். மேற்படி தீர்ப்பில் 1 வது எதிரிதான் மற்படி குருசாமி மற்றும் மாரியம்மாளின் மகன் என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, நான்தான் சட்டப்படியான மகள். மேற்படி தீர்ப்பு எதிரிகளுக்கு சாதகமாக உள்ளதால் தான் அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

3) சின்னப்பகவுண்டர், பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் ஆகியோர் எனது தந்தை மற்றும சகோதரர்கள் என்றும், வேண்டும் என்றே விசாரணை நீதிமன்றத்தில் என்னை தரப்பினராக சேர்த்துக் கொள்ளாமல், வழக்கை இழுத்தடிப்பதற்காக என்னை தரப்பினதாக சேர்க்கச் சொல்லி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. சித்தாகவுண்டர் மகன் குருசாமி இறந்த தேதி 14.01.2004 என்றால், சரிதான். அவர் இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து வாரிசு சான்றிதழ் வாங்கினேன் என்றால், எனக்குத் தேவைப்பட்டதால் 5 வருடங்கள் கழித்து வாங்கினேன். ம.சா.ஆ.7 ஆவணம் 2014 ம் வருடம் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான், மேற்படி சான்றிதழை பொய்யான தகவல்களைக் கொடுத்து வாங்கியதால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்றால், சரியல்ல.

4) 1 மற்றும் 2 எதிரிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி ம.சா.ஆ.7 யை வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல. சித்தாகவுண்டர் மகன் குருசாமி இறந்தபோது நான்தான் இறுதிச் சடங்கை செய்ததாக கூறுவது பொய் என்றால், சரியல்ல. 1 வது எதிரி மேற்படி சித்தாகவுண்டர் மகன் குருசாமி என்பவருக்கு மகன் என்ற முறையில் இறுதிச் சடங்கை செய்தார் என்றால், சரியல்ல. 2 வது எதிரி, மனைவி என்ற முறையில் இறுதிச் சடங்கை செய்தார் என்றால், சரியல்ல, நான் தான் செய்தேன். ம.சா.ஆ.22 முதல் 42 வரையான ஆவணங்களை நான், சித்தாகவுண்டர் மகன் குருசாமி வீட்டிற்கு சென்றிருந்தபோது, நான் யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகள் தான் இறந்துபோன குருசாமியின் சட்டப்படியான வாரிசுகள் என்றால், சரியல்ல. நான் இறந்துபோன சித்தாகவுண்டர் குருசாமியின் மகளும் அல்ல, சட்டப்படியான வாரிசும் அல்ல என்றால், சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளுக்கு சொந்தமாக இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது புகார் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**